ஆகாசவாணி ; செய்திகள்; வாசிப்பவர் ; சங்கரநாராயணன்

உதவி; வெயிலுகந்தாள் சுரேஷ்

தமிழ் செய்தி அறிக்கை; 11.022012 மாலை மணி 7.15 – 7.25

முதலில் தலைப்பு செய்திகள்;

1. உத்திர பிரதேசத்தில் நடைபெற்ற இரண்டாம் கட்ட சட்ட பேரவை தேர்தலில் 60 முதல் 65 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன.

2. 2 G அலைகற்றை உரிமங்கள் ரத்தானது குறித்து தமது சகாக்களுடன் பிரதமர் கலந்தாலோசித்துள்ளார்.

3. மாலத்தீவுகளின் அரசியல் நெருக்கடியை குறைப்பதில் உதவிட இந்தியாவுடன் அமெரிக்காவும் சேர்ந்துகொண்டுள்ளது.

4. பிரிட்டனின், லண்டனில் இந்திய மாணவர் ஒருவர் கத்தியால் குத்தப்பட்டுள்ளார்.

இனி விரிவான செய்திகள்……….

UP POLLING

உத்திர பிரதேசத்தில், 9திற்கும் அதிகமான மாவட்டங்களில் பரவியிருக்கும் 59 தொகுதிகளுக்கு நடைபெற்ற இரண்டாம் கட்ட தேர்தலில் 60 முதல் 65 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன. பூர்வாங்க அறிக்கைகளின்படி, 62 சதவீதத்திற்கு அதிகமான வாக்குகள் பதிவாகியிருப்பதாகவும், பல்வேறு வாக்கு சாவடிகளில், வாக்களிப்பதற்காக மக்கள் வரிசிஅயில் நின்று கொண்டிருப்பதாக தேர்தல் ஆணைய வட்டாரங்களை மேற்கோள்காட்டி எமது லக்னௌ நிருபர் தெரிவிக்கிறார். வாக்குபதிவின்போது விரும்பத்தகாத சம்பவங்கள் ஏது நிகழவில்லை. மந்தமாக ஆரம்பித்த வாக்கு பதிவு பின்னர் சூடுபிடித்தது. மத்ய துணை இராணுவ படைகளின் உதவியுடன் வாக்கு பதிவு மையங்களில் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. நேபாளத்துடனான சர்வதேச எல்லை மற்றும் பீகார் மாநிலத்துடனான எல்லைகள் சீலிடப்பட்டிருந்தன. சமூக விரோத சக்திகளை சமாளிக்க பல்வேறு இடங்களில் தடைகள் அமைக்கப்பட்டிருந்தன. இந்த கட்ட தேர்தலில், 76 பெண்கள் உட்பட மொத்தம் 1098 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

PM

இரண்டு ஜி அலைக்கற்றை ஒதுக்கீட்டின் 122 உரிமங்களை உச்சநீதிமன்றம் ரத்து செய்து உத்தரவு பிறப்பித்ததால் தொலைத்தொடர்பு துறையில் ஏற்பட்டுள்ள தாக்கம் குறித்து, பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் இன்று அமைச்சரவையின் மூத்த சகாக்களுடன் விவாதித்தார். இக்கூட்டத்தில் நிதி அமைச்சர் பிரணப் முகர்ஜி, உள்துறை அமைச்சர் ப சிதம்பரம், தொலைத்தொடர்புத்துறை அமைச்சர் கபில் சிபல் மற்றும் சட்ட அமைச்சர் சல்மான் குர்ஷித் ஆகியோர் கலந்து கொண்டனர். அட்டார்னி ஜெனரல் G E Vahanvatim, தொலைத்தொடர்பு செயலர் ஆர்.சந்திரசேகரும் உடனிருந்தனர். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு கபில் சிபல், நீதிமன்ற உத்தரவின் விளைவுகள் குறித்து மூத்த அமைச்சர்களுக்கு தெரிவிக்கவே இக்கூட்டம் நடைபெற்றதாக சொன்னார். தீர்ப்பை முழுமையாக

ஆராய்ந்து எடுத்துரைத்த தொலைத்தொடர்பு செயலர் ஆர் சந்திரசேகர், அதற்கான வழிவகைகளையும் குறிப்பிட்டார். முன்னாள் தொலைத் தொடர்பு துறை அமைச்சர் ஆ ராசா பதவிக்காலத்தில், இரண்டு ஜி அலைக்கற்றை ஒதுக்கீட்டில் அளிக்கப்பட்ட 122 உரிமங்கள் சட்டவிரோதமானது என்று அறிவித்து கடந்த வாரம் உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

PRESIDENT

Jammu Kashmirல், உள்ள சில சக்திகள் வெறுப்புணர்வை ஏற்படுத்த முயற்சி செய்து வன்முறையில் ஈடுபடுவதாக குடியரசு தலைவர் Pratibha DeviSingh Patil கூறுகிறார். அவர்களின் இந்த சூழ்ச்சியான செயல்களிலிருந்து அடுத்த தலைமுறையினர் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்றார். புது தில்லியில், ஜம்மு காஷ்மீரிலிருந்தாக சுமார் 158 மாணாக்கர்கள் குழுவை சந்தித்துப் பேசிய அவர், தேசிய வளர்சிக்கு கடுமையாக உழைக்குமாறு கோரினார்.

KASHMIR

ஜம்மு கஷ்மீரின் பாரமுல்லா மாவட்டத்தில் இளைஞர் ஒருவர் இராணுவத்தால் தவறுதலாக சுடப்பட்ட சம்பவம் குறித்து, நீதி விசாரணையை நடத்த அம்மாநில முதலமைச்சர் ஓமர் அப்துல்லா உத்தரவிட்டுள்ளார். நேற்றிரவு ஒன்பது மணியளவில், பாரமுல்லா மாவட்டத்தில் Rafiabad பகுதியில் லேசர் கிராமத்தில் வசிக்கும் ASHIQ HUSSAIN RATHER என்ற இளைஞர் குண்டடி பட்டு உயிரிழந்தார்.

BROADCAST

ஒலிபரப்பு துறையில் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை ஊக்குவிக்க, செய்தி ஒலிபரப்பு அமைச்சகம் யோசனகளை தெரிவித்துள்ளது. தலையில் அணியும் ட்ஜிட்டல் செட்டுகள், மற்றும் செட் டாப் பெட்டிகளுக்கான வரி குறைப்பு மற்றும் குறிப்பிட்ட காலத்திற்கான வருமானவரி விலக்கு போன்றவை இதிலடங்கும். புது தில்லியில் இன்று மூன்று நாள் சர்வதேச மாநாட்டை தொடக்கிவைத்து பேசிய செய்தி ஒலிபரப்பு துறை இணையமைச்சர் ஜெகத்ரட்சகன், செயலர்கள் கமிட்டி யோசனைகளுடன் இவை வெளிவந்துள்ளன என்றும் விரைவிலேயே நல்ல செய்திகளை எதிர்பார்க்கலாம் என்றும் கூறினார். டிஜிட்டல் மயமாக்கம் மூலம் பலரும் பயனடையலாம் என்றார், அவர். பண்பலை வானொலிக்கான ஏல பேரம், முற்றிலும் வெளிப்படையாக, 3 G ஏல பேரத்தை போன்றே இந்த ஆண்டு இறுதிக்குள் நடத்தப்படும் என்று இந்த நிகழ்ச்சியின்போது பேசிய செய்தி ஒலிபரப்பு செயலர் uday Kumar Varma கூறினார்.

CONFERENCE

தனியார் உயர்கல்வி நிறுவனங்களில் நடக்கும் முறைகேடுகளைக் களைய வரைவு மசோதா தயாரிக்கப்பட்டு வருவதாக மனித ஆற்றல் மேம்பாட்டுத் துறை இணை அமைச்சர் டாக்டர் டி.புரந்தேஸ்வரி கூறினார். புதுச்சேரியில் நடைபெறும் பத்திரிகையாளர்கள் மாநாட்டில் இன்று மாலை பேசிய அவர், தேசிய பதிவு செய்தல் மசோதா நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்படும் என்று கூறிய அமைச்சர், மேம்பட்ட கல்வியை அளிக்க தரமான கட்டமைப்புகளை அனைத்து கல்வி நிறுவனங்களும் கொண்டிருப்பது கட்டாயமாக்கப்படும் என்றும் கூறினார். உலகமய சவால்களை எதிர்கொள்ள கல்விக் கொள்கையை மறு ஆய்வு செய்ய வேண்டிய தருணம் இது என்று அமைச்சர் மேலும் சொன்னார். நாடாளுமன்ற நடவடிக்கைகளை எதிர்க்கட்சிகள் தடுப்பது குறித்துப் பேசிய அவர், கல்வியில் கொள்கைகளை உருவாக்கும் ஏறத்தாழ 14 மசோதாக்கள் இன்னமும்

நிறைவேற்றப்படவில்லை என்றார். சமீபத்தில் சென்னையில் ஆசிரியர் ஒருவர் மாணவரால் குத்திக் கொலை செய்யப்பட்ட சம்பவம் துரதிருஷ்டவசமானது என்று குறிப்பிட்ட டாக்டர் புரந்தேஸ்வரி, உயிரிழந்த ஆசிரியரின் குடும்பத்திற்கு தனது இரங்கலைத் தெரிவித்தார். ஆசிரியர்களும், பெற்றோர்களும் இணைந்து குழந்தைகளின் நடத்தையை கூர்ந்து கவனிக்க வேண்டிய அவசியத்தை இச்சம்பவம் உணர்த்தியிருப்பதாக அவர் சொன்னார்.

## DAY

கல்வி, கருத்து சுதந்திரம் மற்றும் மேடை பேச்சுக்களை பரப்புவதில் வானொலி ஆற்றும் பங்கு பணிகளுக்காக, ஐநாவின் கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு கழகம் UNESO திங்களன்று உலக வானொலி தினத்தை அனுசரிக்கவுள்ளது. இந்த தினத்தையொட்டி UNESCOவின் தலைமை இயக்குநர் Irina Bokova தாம் வெளியிட்டிருக்கும் செய்தியில், மக்கள் மற்றும் சமூகங்களை இணைப்பதிலும், அறிவை பகிர்ந்துகொள்வதிலும், புரிந்துணர்வை வலுப்படுத்திகொள்வதிலும், வானொலியிலிருந்து நாம் அதிகப் பயன்களை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கூறியுள்ளார்.

## MALDIVES

மாலத்தீவுகளின் அரசியல் நெருக்கடியை குறைப்பதில் உதவிட இந்தியாவுடன் அமெரிக்காவும் சேர்ந்துகொண்டுள்ளது. அதிபர் Mohammed Waheed மற்றும் வெளியேற்றப்பட்ட அதிபர் Mohammed Nasheedஐ தெற்கு ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க அமைச்சர் Robert Blake இன்று Maleயில் சந்தித்து அரசியல் நிலைமைகள் குறித்து கலந்தாலோசித்தார். சுமார் அரை மணி நேரம் நடைபெற்ற இந்த சந்திப்பு, Nasheed கட்டாயமாக பதவி இறக்கப்பட்ட 4 நாட்களுக்குப்பின் நடைபெற்றுள்ளது. இந்து மாக்கடலில் அமைந்திருக்கும் இந்த தீவில் தேசீய ஒருமைப்பாடு அரசு ஒன்று விரைவிலேயே அமைவதில் உதவிடுவதற்கான இந்தியாவின் விருப்பத்தை திரு M. கணபதி மூலம் இரு தலைவர்களுக்கும் பிரதமர் Dr. Manmohan Singh தெரிவித்த ஓர் நாளுக்குப்பின் இந்த சந்திப்பு நிகழ்ந்துள்ளது. மாலத்தீவின் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலாவது அதிபரான Nasheedஉடனான தனது சம்பந்தங்களில் தாம் உண்மையாக நடந்துகொள்வதாக Waheed இந்தியாவிற்கு உறுதியளித்திருப்பதாக தெரிகிறது. மாலத்தீவுகளின் புதிய நிர்வாகத்திற்கான அமெரிக்க அங்கீகாரம் குறித்து முன்னாள் அதிபர் Nasheed கவலையடந்ததையடுத்து அமெரிக்க அமைச்சர் அங்கு சென்றுள்ளார். எதிர்கட்சி தலைவர்கள், முன்னாள் ஆட்சியின் ஆதரவிலான பாதுகாப்பு படைகள் மற்றும் Waheed அரசின் சூழ்ச்சியினால்தான் செவ்வாயன்று தான் பதவி விலக நேரிட்டதாக கூறியுள்ளார். மாலத்தீவுகளில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் உள்ள இந்தியர்கள் அந் நாட்டில் பாதுகாப்புடன் உள்ளனர். அங்குள்ள சுமார் 29000 இந்தியர்களில் 22000 ஆயிரம் பேர் Maleயில் வசிக்கின்றனர்.

## TRADE

இந்தியாவும், பாகிஸ்தானும் இருதரப்பு வர்த்தகத்தை ஆண்டுக்கு 1500 கோடி டாலருக்கு உயர்த்தும் திறன் கொண்டவை என்று பாகிஸ்தானுக்கான இந்திய ஹை கமிஷனர் சரத் சபர்வால் கூறியுள்ளார். இந்தியா வளர்ந்து வரும் பொருளாதார நாடு என்பதால் அண்டை நாடுகள் அதன் வளர்ச்சியின் பலனைப் பெற வேண்டும் என்றார். இரு நாட்டு மக்களின் பரஸ்பர நலன்களுக்காக, இருதரப்பிடையேயும் நம்பிக்கையும், புரிந்துகொள்ளலும் தேவை என்று அவர் மேலும் சொன்னார். பாகிஸ்தானியத் தொழிற்துறை குறித்த அச்சத்தைப் போக்கிய

அவர், இந்தியாவில் மருந்து விலைகள் மலிவாக உள்ளதால் பாகிஸ்தான் அதன் பலன்களைப் பெற வேண்டும் என்றார். இந்த ஆண்டு இறுதிக்குள் மிகவும் வேண்டப்பட்ட நாடு என்ற அந்தஸ்தை இந்தியாவிற்கு பாகிஸ்தான் அளிக்கவிருப்பதாகக் கருதப்படுகிறது.

<u>JAPAN EMPEROR</u>

ஜப்பான் அரசர் அக்கிஹிட்டோ நேற்று டோக்கியோ பல்கலைக்கழக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு இதய பரிசோதனை செய்யப்பட்டது. 78 வயதான மன்னருக்கு ஒரு மணி நேர ஸ்கேன் எடுக்கப்பட்டது. இருதய ரத்த ஓட்ட குறைபாடு காரணமாக அவருக்கு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

<u>UK INDIAN</u>

பிரிட்டனின் லண்டன் Borough Newhamல், இந்திய மாணவர் ஒருவர் கத்தியால் குத்தப்பட்டார்.நேற்றிரவு இச்சம்பவம் நிகழ்ந்தது. அவரது நிலை கவலைக்கிடமாக இருப்பதாகக் கூறப்படுகிறது. எம்.பி.ஏ. படிப்பதற்காக அவர் அங்கு சென்றதாகக் கூறிய ஸ்காட்லேண்ட் யார்ட் போலீஸ் அவரது பெயரை வெளியிடவில்லை. இச்சம்பவம் தொடர்பாக 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

<u>EGYPT STRIKE</u>

எகிப்தில் இன்று எதிர்க்கட்சிகள் நடத்திய நாடுதழுவிய வேலை நிறுத்தத்தையும் மீறி, தலைநகர் கெய்ரோவில் நிலைமை அமைதியாகவே இருந்தது. ராணுவ ஆட்சியாளர்கள் உடனடியாக வெளியேற வேண்டும் என்றும், ஆட்சி அதிகாரத்தை சிவில் நிர்வாகத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் அவர்கள் கோருகின்றன. அரசு பேருந்துகளும், ரயில்களும் வழக்கம் போல் இயங்கின. வேலை நிறுத்தத்தை மறுத்துள்ள அரசுப் பணியாளர்கள் வழக்கத்தையும் மீறி அதிக மணி நேரம் உழைக்க உறுதி எடுத்துள்ளனர். எகிப்தின் முக்கிய பகுதிகளில் துருப்புக்களும், ஆயுதமேந்திய படைகளும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.